பத்திரிக்கைச் செய்தி

தீர்வு பத்திரத்தை விடுவிக்க ரூ.1,00,000/- லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் சார் பதிவாளர் மற்றும் ஆவண எழுத்தர் (தனியார்) அவர்களுக்கு 3 ஆண்டுகள் சிறை மற்றும் ரூ.25,000/- அபராதம் விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.சசிகுமார், வேலூர் மாவட்டத்தை சேர்ந்தவர். புகார்தாரர் தன்னுடைய பரம்பரை தீர்வு பத்திரத்தை விடுவிக்க சார் பதிவாளர் அலுவலகம், காட்பாடி, வேலூர் மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து தீர்வு பத்திரத்தை விடுவிக்க திரு.தேவராஜன், சார் பதிவாளர், காட்பாடி, வேலூர் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.1,00,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளனர். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, வேலூர் பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 11.10.2019 அன்று மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின்போது புகார்தாரரிடமிருந்து திருசந்திரமோகன், ஆவண எழுத்தர் (தனியார்) லஞ்சபணம் ரூ.1,00,000/- பெற்றபோது இருவரும் கைது செய்யப்பட்டனர். இவ்வழக்கானது மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம், வேலூர் மாவட்டத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் நேற்று 16.04.2026ந் தேதி திரு.தேவராஜன், சார் பதிவாளர், காட்பாடி மற்றும் திருசந்திரமோகன், ஆவண எழுத்தர் (தனியார்) ஆகியோர்களுக்கு 3 ஆண்டுகள் சாதாரண சிறை தண்டனையும் மற்றும் ரூ.25,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.